1994 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 516 திரு எம். பெரியவீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

516—

பெரியகுளம் தொகுதியில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் ஏற்படுத்துதல்

*9048—திரு. எம். பெரியவீரன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் தொகுதியில், பெருமாள்புரம் இ. புதுக் கோட்டை, சோத்துப்பாறை ஆகிய ஊர்களில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

12–8–1993-ல் அரசு ஆணை வெளியிடப்பட்டு இந்த ஊர்களில் பள்ளிகள் திறக்கப்பட்டுவிட்டன என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட இந்த 3 ஊர்களிலும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளைத் துவக்கியதற்கு நான் அரசுக்கு நன்றி யைக் கூறிக்கொள்கிறேன் அந்தப் பள்ளிகள் இப்போது கூரைக் கட்டிடத்தில் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. அதற்கு கான்கிரீட் கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளி களுக்கு கட்டிடம் கட்டித் தருகின்ற பொறுப்பு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் செய்து வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரிய இடத்தை அணுக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 517, திரு. எம். தங்கவேல், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் ச. ஆரோக்கியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்,

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS